**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.306/2023 – P.W.5**

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திருமதி. மகாலெட்சுமி | Father Name. பாலையா |
| Village : திட்டச்சேரி | Age: 43 |
| Date : 10.08.2026 | தொழில் : காவல் ஆய்வாளர் |

நம்பர்: 9498108506

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of August 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of August 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது திட்டச்சேரி காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். திட்டச்சேரி காவல் நிலையத்தின் குற்ற 309/2019, இதச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழான வழக்கு சம்மந்தமாக தலைமை காவலர் ரமேஷ் என்பவர் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்மந்தமாகவும், உதவி ஆய்வாளர் திரு. மங்கலநாதன் முதல் புலன்

விசாரணை மேற்கொண்டது சம்மந்தமாகவும், தொடர்ந்து காவல் ஆய்வாளர்கள் திரு. இராதாகிருஷ்ணன் மற்றும் திரு. ராஜேஷ் ஆகியோர்கள் மேல் புலன் விசாரணை செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்தது சம்மந்தமாகவும் ஆவணங்களைப் பார்த்து சாட்சியம் அளிக்க குவிமுச பிரிவி 311ன் கீழான மனுவின் அடிப்படையில் அரசு தரப்பில் அழைக்கப்பட்டதால் ஆஜராகி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 07.12.2019ம் தேதி, திட்டச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலர் 1299 திரு. ரமேஷ் நிலைய அலுவலில் இருந்தபொழுது, விபத்தில் காயம்பட்டு முனியம்மாள் என்பவர், நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் உள்ளார் என்ற தகவலை பெற்றுள்ளார், அவரே மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முனியம்மாள் என்பவரை பார்த்தபோது, அவர் பலத்த காயமுற்று பேச முடியாத நிலையில் சுயநினைவின்றி கிடந்துள்ளார். அதனால் மேற்படி முனியம்மாளுடன் இருந்த அவரது மருமகள் மகேஷ்வரி என்பவரை மேற்படி தலைமை காவலர் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் வந்த மேற்படி தலைமை காவலர் மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் திட்டச்சேரி காவல் நிலைய குற்ற எண்.309/2019, இதச பிரிவுகள் 279, 304(எ)ன் கீழ் கடந்த 08.12.2019ம் தேதி பிற்பகல் 03.30 மணியளவில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

மேற்படி புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு

அனுப்பிவைத்துள்ளார். ஒரு நகலை வழக்கு கோப்புடன் புலன் விசாரணைக்காக மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த திரு. மங்கலநாதன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். புகார் வாக்குமூலம் ஏற்கனவே அசா.1றின் மூலம் அதசாஆ.1றாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.4**.

வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட மேற்படி உதவி ஆய்வாளர் கடந்த 8.12.2019ம் தேதி மாலை 04.30 மணியளவில் சம்பவ இடம் சென்று, அங்கிருந்த சாட்சிகளான ராமையன், அப்துல்ஹாதி, ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பார்வை மகசர் **அதசாஆ.5,** மாதிரி வரைபடம் **அதசாஆ.6**.

1 முதல் 5 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கடந்த 07.12.2019ம் தேதி மதியம் 02.45 மணியளவில் இந்த விபத்தில் காயம்பட்ட முனியம்மாள் பெண் வயது 50, த/பெ.மதியழகன் என்பவர் கடந்த 11.12.2020ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில், தஞ்சாவூர், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். அந்த தகவலை பெற்றதும் வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக நாகூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த திரு. இராதாகிருஷ்ணன் என்பவரிடம் மேற்படி உதவி ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார்.

மேற்படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை பெற்று கடந்த 11.12.2019ம் தேதி மாலை 4.30 மணியளவில் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337லிருந்து இதச பிரிவுகள் 279, 304(ஏ) வாக மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அதசாஆ.7**. பின்னர் கடந்த 12.12.2019ம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துகல்லூரி மருத்துவமனைக்கு சென்று இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன மேற்படி முனியம்மாளின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் அன்று காலை 10.30 மணி முதல் நன்பகல் 12.00 வரை விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசாஆ.8**. பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் மேற்படி பிரேதத்தின் மீது சடல கூராய்வு செய்ய வேண்டி தக்க வேண்டுகோள் கடிதத்தினை தலைமை காவலர் 1299 திரு.ரமேஷ் என்பவர் மூலம் மேற்படி மருத்துவமனை மருத்துவரிடம் மேற்படி காவல் ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார். சடல கூராய்விற்கு பின்னர் மேற்படி முனியம்மாளின் பிரேதத்தினை நல்லடக்கம் செய்யவேண்டி உறவினர் வசம் ஒப்படைத்துள்ளார்.

கடந்த 03.07.2020ம் தேதி இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட எதிரி முகமதுமருபை திட்டச்சேரி பேருந்து நிலையத்திற்கு அருகே வைத்து காவல் ஆய்வாளர் திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் கைது செய்துள்ளார். பின்னர் எதிரியை நிலையம் கொண்டுவந்து காவல் நிலைய பிணையிலேயே விடுவித்துள்ளார். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட PY 02 Q 2697 என்ற எமஹா FZS என்ற இருசக்கர வாகனத்தினை கடந்த 09.07.2020ம் தேததி தக்க

வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்விற்காக நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வளார் நிலை 1றாக பணியில் இருந்த திரு.வி.சக்திவேல் என்பவரிடம் ஆஜர் செய்துள்ளார்.

மேற்படி காவல் ஆய்வாளர் பணிமாறுதலாகி சென்று விட்டதால் வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் என்பவர் எடுத்துக்கொண்டுள்ளார். இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன முனியம்மாளுக்கு நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் முதலுதவி சிகிச்கை அளித்த மருத்துவர் திரு. அப்துல்ரஹ்மான் என்பவரை கடந்த 23.02.2021ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவமனையில், மேற்படி முனியம்மாளை சிகிச்சையில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது, அந்த விபத்து பதிவேட்டு ஆவணம்தான் **அதசாஆ.9**. மேற்படி முனியம்மாளின் பிரேதத்தின் மீது சடல கூராய்வு செய்த தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் திரு. விஷ்ணு என்பவரை கடந்த 23.02.2021ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மருதுவர் வழங்கிய சடல கூராய்வு அறிக்கை பெற்றுள்ளார். அந்த சடல கூராய்வு அறிக்கை **அதசாஆ.10**.

மேற்படி இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரையும் கடந்த 23.02.2021ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அதசாஆ.11**. இவ்வழக்கின்

புகார் வாக்குமுலம், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த மற்றும் சடல கூராய்விற்கு உதவியாக இருந்த மேற்படி தலைமை காவலர் ரமேசை கடந்த 23.02.2021ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் விசாரணை முடித்து குற்ற அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளர் பதிவு செய்துள்ளார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

இந்த விபத்தானது எங்களது காவல் நிலையத்தில் இருந்து சுமார் 2.00 கி. மீட்டர் தூரத்திற்குள் திட்டச்சேரியில் இருந்து தேவன்குடி தார் சாலையில் போக்குவரத்தும், குடியிருப்புகளும் மிகுந்த பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் கடந்த 07.12.2019ம் தேதி பிற்பகல் 2.15 மணியளவில் நடைப்பெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் விபத்து பிற்பகல் 2.45 மணியளவில் நடைப்பெற்றதாக சொல்லி விபத்து நடந்த மறுநாள் பிற்பகல் 3.30 மணியளவில்தான் நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்தவுடன் எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து, எங்களது காவல் நிலைய போலிசார் சம்பவ இடம் சென்று அவர்கள்தான் காம்பட்ட நபரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்துள்ளார்கள் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. விபத்து குறித்து உடனடியாக கிடைத்த தகவல் அடிப்படையில் எங்கள் காவல் நிலைய போலிசார் சம்பவ இடம் சென்று விசாரித்ததன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஏன் அதுப்போல உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாமல் மறுநாள் புகார் வாக்குமூலம் பெற்றதுபோல காலதாமதமாக இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

அதுப்பற்றி எனக்கு தெரியாது. தலைமை காவலரால் கடந்த 08.12.2019ம்தேதி பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையும் உடனடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் எதனால் ஏறத்தாழ 2 மாதங்கள் கழித்து கடந்த 19.02.2020ம் தேதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பிவைக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. முனியம்மாளை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கும் பொது அவர் மீது அடையாளம் தெரியாத ஓர் இருசக்கர வாகனம் மோதியதாக அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல்அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல அசா.1 மகேஷ்வரி இந்த விபத்தில் காயம்பட்ட அவரது மாமியார் முனியம்மாளை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளாரா என்றால் இல்லை, மேற்படி முனியம்மாளை அவரது சகோதரி தங்கம்தான் சிகிச்சைக்கு கொண்டுபோய் சேர்த்துள்ளார்.

முனியம்மாள் மீது மோதிய இருசக்கர வாகனம் எது என்று தெரியாமல் பின்னிட்டு எதிரியைகொண்டு இந்த வழக்கை முடிக்க வேண்டி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த எதிரி மோதியதுபோல இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது உண்மை விபரத்தையும், ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவலையும் மறைத்து பின்னிட்டு தவறாக உருவாக்கப்பட்டது என்பதால்தான் இரண்டு மாதங்கள் கழித்து காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு

காலதாமதமாக அனுப்பிவைக்கப்பட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையுடன்தான் அதற்கு முன்பாகவே தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையும், நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையைகூட அதனை 11.12.2019ம் தேதி காவல் ஆய்வாளர் தயார் செய்ததாக சொல்லி அவரிடம் 12.12.2019ம் தேதி கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

இந்த விபத்து சம்பவத்தில் ஈடுப்பட்டதாக சொல்லப்படும் எதிரியை ஏன் உடனடியாக கைது செய்யப்படாமல், ஒரு வருடம் கழித்து இந்த வழக்கு சம்மந்தமாக கைது செய்யப்பட்டதுபோல கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர் வெளிநாடு சென்று இருக்கலாம். அதேப்போல இந்த விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தைகூட ஏன் கையகப்படுத்தி உடனடியாக மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. விபத்தில் ஈடுபட்ட உண்மையான வாகனத்தை மறைத்து, கல்லூரி படித்துக்கொண்டிருந்த எதிரியையும், PY 02 Q 2697 என்ற இருசக்கர வாகனத்தையும் தவறாக உட்படுத்தி இந்த வழக்கானது ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மோட்டார் வாகன ஆய்வாளரால் சம்பவம் நடந்த உடனேயே எங்களது வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் சம்பவ இடம் ஆய்வு செய்யப்பட்டதா, அதேபோன்று சம்பவ இடத்தில் வைத்து இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமான சாட்சிகளின் குவிமுச பிரிவு 161(3)ன் படியாக வாக்குமூலங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தவறாக பின்னிட்டு

உருவாக்கப்பட்டதால்தான் குற்ற அறிக்கையுடன் காலதாமதமாக நீதிமன்றதிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கில் நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததுபோல எதிரியை கைது செய்யவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவருக்கும் இந்த விபத்து சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்தில் யார் ஈடுப்பட்டார்கள் என்ற விபரம் தெரியாமல், நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல், காலம் கடந்து இவ்வழக்கின் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.10 18:29:49 +0530